## நிர்மாண உத்தரவாத நிதியம் - 2014

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 3/136 ஆம் இலக்க உறுதியின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தக்காரர்களுக்காக சேவை நாடுனர்களுக்கு நிதியத்தினால் மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட ரூபா 2,162,680 பெறுமதியான பிணை முறிகளை நிர்மாண சேவை நாடுனர்களால் காசாக்கியமையால் நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடுவதற்காக கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. முன்னைய இரண்டு ஆண்டுகளில் இவ்வாறு பதிவழிக்கப்பட்ட தொகை ரூபா 20,466,700 ஆக இருந்தது.

(ஆ) வெளிவாரி சேவைகள் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய படிகளாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 16,147,431 தொகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினமாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 352,810 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டமை மற்றும் பிணை முறி வருமானம் ரூபா 1,760,784 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததை சரிசெய்வதற்காக முன்யை ஆண்டுகளின் சீராக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், பின்னோக்கிய ரீதியில் மீண்டும் கணக்குகள் மீள தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுகளுக்குரிய தவறுகளைச் சரிசெய்தல் பின்னோக்கிய ரீதியில் சீராக்கம் செய்யப்பட்டு முன்னைய ஆண்டின் நிதி நிலைமையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 2,113,594 தொகை முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட திரட்டிய இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக புறம்பான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 யூலை 14 ஆம் திகதிய பீஈடி 38 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிர்மாண உத்தரவாத நிதியம் பெறுமதி சேர் வரிக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்படா திருந்ததுடன், உழைக்கும் போது செலுத்தும் வரிக்கு உட்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2005 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 3/136 ஆம் இலக்க உறுதியின் 7 ஆம் பிரிவு | நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் தலைவர் அல்லது பொறுப்பாளராக செயற்படுவதால் அதற்காக செலவிடப்பட்ட செலவினத்தை மீள் நிரப்புவதல்லாமல் தம்மால் வழங்கப்படும் சேவைக்காக எதுவித படியொன்றையும் நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு உரித்தொன்று இல்லாத போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக தலைவர் படிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபை படிகள் ரூபா 3,902,100 கூட்டுத்தொகையான படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 133,519,853 மிகையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 148,186,101 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,666,248 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், பிணை முறி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வருமானம் குறைவடைந்தமை அதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் கணக்குத் தயாரித்தல் வெளிவாரி சேவைகள் அடிப்படையில் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் 17 உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக மீளாய்வாண்டில் அவர்களுக்கு ரூபா 1,206,258 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக 1999 மே மாதத்தில் நடாத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட 99-05-3.1 ஆம் இலக்க முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் மேற்குறித்த உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக

அவர்களுக்கு எந்த விதமான நியமனமொன்றோ சேவை உடன்படிக்கைகளுக்கு வந்திராமையால் அக்கொடுப்பனவுகளின் வெளிப்படையான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் நிதியத்திற்கு கிடைத்த ரூபா 765,411,739 தொகை நிதி அமைச்சின் அங்கீகாரமொன்று இல்லாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நிதியத்தினால் வழங்கப்படக்கூடிய பிணை முறியின் பெறுமதியின் உச்ச எல்லை குறித்த காலப்பகுதியில் நிதியத்தின் உரித்தில் பத்து மடங்கென 2012 பெப்ரவரி 08 ஆம் திகதிய நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்காக நிதியத்தின் தீர்ப்பாளரான திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தற்போது காணப்படும் பிணைப்பொறுப்பு எல்லை சட்டரீதியானது என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) நிதியத்தின் மதியுரையாளர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக ரூபா 60,000 தொகையான மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனத்திற்காக ரூபா 810,000 தொகை மீளாய்வாண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இரண்டாவது 06 மாதங்களுக்காக அந்த மாதாந்த வாடகை ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக வாடகை உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப்பட்டிக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 15,000 வீதம் 06 மாதங்களுக்காக ரூபா 90,000 தொகையான மேலதிக கிரயம் முறையாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(உ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்கம் என்பவற்றின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ''மஹாஹிமானி'' தேசிய வெகுமதி வழங்கல் விழாவிற்காக உருவாக்கப்பட்ட மஹாஹிமானி சங்கத்திற்கு மீளாய்வாண்டினுள் நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து ரூபா 5,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகையை விளம்பரப்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நிதியத்திலிருந்து அவ்வாறான செலவினமொன்றை மேற்கொண்டதன் தேவைப்பாடு மற்றும் அதிலிருந்து நிதியத்திற்கு நலனொன்று கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்விடயத்திற்காக முன்னைய ஆண்டிலும் ரூபா 2,500,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) அரசின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பொன்றோ அல்லது திறைசேரி செயலாளரின் அங்கீகாரமொன்றோ இல்லாமல் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள மூன்று உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 30,000 ரூபா 5,700 மற்றும் ரூபா 3,500 ஆக 05 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(எ) பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக பிரயாணித்த தூரம் மற்றும் செலுத்திய கட்டணங்களை அடிப்படையாகக் கொண்டு செலவிடப்பட்ட செலவினத்தை மீள்நிரப்பாமல் மாதாந்தம் போக்குவரத்துக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 1,480,000 ஆக இருந்தது.

(ஏ) நிதிப்பிரமாணம், தாபன விதிக்கோவை மற்றும் அரசினால் விநியோகிக்கப்படுகின்ற சுற்றறிக்கை தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் இந்த நிறுவனத்தின் முகாமைத்துவ சபையால் பின்வரும் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(i) நிதியத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த சம்பளத்திற்கு மேலதிகமாக ரூபா 2,621,518 ஆன படிகள் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஒரு உத்தியோகத்தருக்கு வருடாந்தம் கூடியது ரூபா 500,000 இற்கு உட்பட்ட வகையில் திடீர் விபத்து மற்றும் மருத்துவப் பட்டியல் என்பவற்றை மீள் நிரப்புவதற்காக 09/2013 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் மூலம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக முறையான நடைமுறையொன்று காணப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களின் மருத்துவ பட்டியல்களைத் தீர்ப்பதற்காக நிதியத்திலிருந்து ரூபா 1,154,370 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) உத்தியோகத்தர்களின் செயற்திறனை அளவிடாமல் வெவ்வேறு விலைகளின் கீழ் ரூபா 1,724,480 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவொன்றாக வருடாந்த உபகாரப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

(iv) மீளாய்வாண்டின் போது வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் காணப்படும் மிகையை அடிப்படையாகக் கொண்டு மேலே குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக நிர்மாண உத்தரவாத நிதியத்தில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 985,500 ஆன செயற்திறன் படியொன்றும் அதன் கணக்கீட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சேவைகளை வழங்கும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் கணக்குப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 65,521 ஆன செயற்திறன் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(v) பெற்றுக்கொள்ளாத 21 விடுமுறைகளுக்காக நிதியத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 352,642 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் உத்தியோகத்தர்களின் நாளாந்த வருகை மற்றும் வெளியேறல் தொடர்பான முறையான கட்டுப்பாடொன்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் செயலாற்றல் இலக்கு வழங்காமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடி-பீயூ ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து நியதிச்சட்ட நிறுவனங்களாலும் தனது நிறுவனக் கட்டமைப்பு மீளமைக்கப்பட வேண்டியிருந்ததுடன், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை, பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் சம்பள அளவு என்பன திருத்தப்பட்டு தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினது பரிந்துரையின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று இல்லாமல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களாலும் பணிப்பொறுப்பு அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்ட 33 உத்தியோகத்தர்களாலும் நிதியம் பேணப்பட்டு செல்வதால் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு நிரந்தர பதவியணியொ்று அதில் காணப்படவில்லை.

(இ) பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் பணிப்பொறுப்பின் அடிப்படையில் பிரித்து வழங்காமல் தொடர்ச்சியாக 01 வருடம் முதல் 15 ஆண்டுகள் வரையான காலம் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அவர்களுக்கு பணிப்பொறுப்பு அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக மாதாந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. இதில் 03 வருட தொடர்ச்சியான சேவைக்காலத்தைக் கொண்ட 20 உத்தியோகத்தர்கள் இருந்தனர். இதன் காரணமாக பணிப்பொறுப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், வாழ்க்கைச் செலவுப் படிகள், ஊக்குவிப்புப் படிகள் போன்றவற்றை செலுத்துவதற்கு நேர்ந்திருந்தன. மீளாய்வாண்டின் போது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், வாழ்க்கைச் செலவுப் படிகள், ஊக்குவிப்புப் படிகள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 5,686,905 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நிதியத்தின் மூலமோ அல்லது அமைச்சின் மூலமோ உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

நிதியம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்தே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதியத்தின் உத்தியோகத்தர்கள் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஆ) நிதி முகாமைத்துவம்